PONDICHERRY UNIVERSITY
PUBLICRELATIONS WING

06/03/2020

## NOTIFICATION

On 4th March 2020. The Pondicherry University issued a press release through the PR office on behalf of the administration. The press release gives a detailed perspective on matters related to the student protest and addressing the different issues that some student organisations have been raising. With regards to the 25% reservation for Pondicherry students. The university mentioned this "....MHRD is instructing strict compliance of implementation of Central Education Institutions (reservation in admission) act 2006 and its amendments....and Pondicherry University on its own cannot do any amendments in the above said bill to give provision to 25% seats to students belonging to UT of Puducherry" Referring only to the fact that Pondicherry University on it's own doesn't have the any powers to provide 25% reservation to Puducherry students as the university is reservation are governed by the above mentioned act.

But one specific media person mischievously titled their article based on our press release as "**பல்கலைக்கழகத்தில் புதுவை மாணவர்களுக்கு இடஒதுக்கீடு இல்லை - பதிவாளர் அறிவிப்பு**" Which roughly translates to no reservations for Pondicherry students announces Registrar.

Not only the said article's title is a complete misinformation of the real facts mentioned in the university's press release, it mischievously portrays false information which is a blatant lie. Anyone who reads the press release by the university and the article published by the said paper will know how that media person has clearly manipulated the truth and facts to make it sound completey different. Certain political organizations based on this manipluted and false article have raised detest towards the administration and the office of the Registrar. We would like to inform that no such thing was actually said by the university or the office of the registrar and we would like to request them to abstain from spreading false information based on this manipulated article which has twisted the truth and made up its own lie. The University has also taken appropriate steps to issue a clarification by the newspaper for this misinformation. The same newspaper has also released a clarification article on the same topic today. The university and the administration is always working for welfare of our student community and the students of Puducherry, we request everyone not to be misinformed based on fake news like these and to kindly do your own fact check.

Dr. R. VENKATESAKUMAR
Public Relations Officer &
Social Media Champion.
Public Relations Wing,
Pondicherry University
Puducherry- 605 014

March 04, 2020



ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் உருளையன்பேட்டை தொகுதி திடீர் நகரில் குடிசை பகுதியில் வசிக்கும் மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கான உரிமையாளர் அடையாளம் காணும் வகையில் புகைப்படம் எடுக்கும் பணியை சிவா எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

இதற்கு மேலும்

# பல்கலைக்கழகத்தில் புதுவை மாணவர்களுக்கு இடஒதுக்கீடு இல்லை

## பதிவாளர் அறிவிப்பு

புதுச்சேரி, மார்ச். 4–

புதுவை பல்கலைக்கழக பதிவாளர் சித்ரா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:–

**கட்டண உயர்வு**

புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் அதிகரித்து வரும் செலவினங்களை சமாளிக்க கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு பிறகு கல்வி கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 மாதங்களில் இது தொடர்பாக எந்த எதிர்ப்பும், பிரதிநிதித்துவமும் செய்யப்படவில்லை. ஆனால், திடீரென 2019–2020–ம் ஆண்டின் மாணவர் பேரவை தற்போது இந்த பிரச்சினையை கையில் எடுத்துள்ளது.

இந்த சிக்கலை தீர்க்க புதுவை மத்திய பல்கலைக்கழக மேலாண்மை பள்ளியின் புல முதன்மையர் முனைவர் சந்திரசேகரராவின் தலைமையில் 5 சுற்று கூட்டங்கள் நடந்தது. மாணவர்களின் கோரிக்கையை கருத்தில் கொண்டு துணைவேந்தர் குர்மீத்சிங் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள மாணவர்களுக்கும் 20 சதவீத கட்டண சலுகையை வழங்கினார். இருப்பினும் வகுப்புகளை புறக்கணிப்பு செய்யும் மாணவர்கள் கட்டணத்தை நிர்ணயிக்க வலியுறுத்தி 100 சதவீதம் கட்டண உயர்வை திரும்ப பெறக் கோருவது நியாயமற்றது.

**தவிர்க்க முடியாது**

மத்திய பல்கலைக்கழக மானியக்குழு இந்த செலவுகளை சமாளிக்க ரூ.15 கோடி வழங்கியது. ஆனால், பல்கலைக்கழகம் கிட்டத்தட்ட ரூ.65 கோடி செலவு செய்துள்ளது.

முதுநிலை படிப்புகளை தொடரும் 1,500 எஸ்.சி., எஸ்.டி., மாணவர்கள் பல்கலைக்கழகத்தால் செயல்படுத்தப்படும் பல்வேறு உதவித்தொகை திட்டங்கள் மூலம் 100 சதவீத கல்வி கட்டணம், விடுதி கட்டணம் ஆகியவற்றை முழுவதுமாக திரும்ப பெறுகின்றனர்.

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு 100 சதவீத இலவச விடுதி மற்றும் கல்வி கட்டணம் வழங்கப்படுகிறது. மாணவிகளுக்கு இலவச விடுதி வசதிகள் வழங்கப்படுகின்றன.

புதுவை பல்கலைக்கழகம் 3 வெவ்வேறு உதவி தொகைகளை வழங்குகிறது. எனவே, 10 ஆண்டு இடைவெளிக்கு பிறகு இந்த கட்டண உயர்வு தவிர்க்க முடியாதது.

**இடஒதுக்கீடு இல்லை**

பல்கலைக்கழகத்தின்

வேலை சார்ந்த படிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அரசு கல்லூரிகளில் வழங்கப்படாத படிப்புகளில், பல்கலைக்கழகம் தொடர்ந்து புதுவை மாணவர்களுக்கு 21 முதுநிலை படிப்புகளுக்கு 25 சதவீத இடஒதுக்கீடு வழங்கியது.

ஆனால், தற்போது கிட்டத்தட்ட 90 கல்லூரிகள் புதுவை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் பல புதிய படிப்புகள் அந்த கல்லூரிகளால் வழங்கப்படுகின்றன.

இருப்பினும் தற்போதுள்ள மத்திய கல்வி நிறுவனங்கள் சேர்க்கையில் இடஒதுக்கீடு சட்டத்தின்படி எஸ்.சி., எஸ்.டி., ஓ.பி.சி. மற்றும் பொருளாதார ரீதியிலான இடஒதுக்கீடு மட்டுமே வழங்க இயலும். எனவே, புதுவை மாணவர்களுக்கு 25 சதவீத இடஒதுக்கீடு என்பது புதிய துறைகளில் சாத்தியம் இல்லை.

புதுவை பல்கலைக்கழகத்தில் அமைதியாக நடைபெற்று வரும் கல்விச்சூழலை ஒரு சிறிய குழுவினர் சீரழிக்கின்றனர். அவர்களுடனும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்த பல்கலைக்கழக நிர்வாகம் முயற்சி எடுக்கும்.

இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

வீட்டின் கதவை உ



ஆறுபடைவீடு

செவித்திறன் வ

பி.பி.ஏ. முதலாம் ஆண்டு

March 06, 2020

# ஏற்கனவே இருக்கும் இடஒதுக்கீடு புதுவை மாணவர்களுக்கு தொடரும்

## பல்கலைக்கழகம் விளக்கம்

புதுச்சேரி, மார்ச். 6–
புதுவை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:–

மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை உத்தரவின் அடிப்படையில் மத்திய கல்வி நிலையங்களில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

### தொடர்ந்து வழங்கப்படும்

ஆனால், புதுவை பல்கலைக்கழகத்தில் புதுவை மாணவர்களுக்கென்று 25 சதவீத இடஒதுக்கீடு 21 துறைகளில் வழங்கப்பட்டு வருகிறது. அந்த இட ஒதுக்கீடு தொடர்ந்து வழங்கப்படும்.

அதே நேரத்தில் புதிய துறைகளிலும் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி, துணை ஜனாதிபதியிடம் முதல்–அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### தீர்மானம்

புதுவை பல்கலைக்கழக ஆட்சிமன்ற குழு கூட்டத்திலும், மற்ற துறைகளில் இடஒதுக்கீடு வழங்க அனுமதிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்த தீர்மானமும் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மனிதவள மேம்பாட்டுத் துறை ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் அடுத்த கல்வி ஆண்டு முதல் மற்ற துறைகளிலும் புதுவை மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.